## திராவிடத்தால் வாழ்கிறோம்

844

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

5

**கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!**

# அண்ணா நூற்றாண்டு நூலகம் மீண்ட கதை!

மதுரையில், **‘கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்’**, கோவையில், **‘பெரியார் நூலகம்’**, திருநெல்வேலியில், **‘காயிதே மில்லத் நூலகம்’**, திருச்சியில், **‘பெருந்தலைவர் காமராஜர் நூலகம்’** என தமிழ்நாட்டின் பெருநகரங்களில் அடுத்தடுத்து அறிவுக் கருவூலங்களை அமைத்தும், அமைத்துக் கொண்டுமிருக்கிறது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு. ஆனால், இவற்றுக்கெல்லாம் விதையாக விழுந்த முதன்மை அடையாளம் என்றால், அது சென்னை, ‘அண்ணா நூற்றாண்டு நூலகம்’தான்.

சென்னை, கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள ‘அண்ணா நூற்றாண்டு நூலகம்’ தெற்காசியாவி லேயே மிகப் பெரிய நூலகங்களில் ஒன்று. 2006-2010 ஆம் ஆண்டு காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, சிங்கப்பூர் நூலகத்தைப் போன்று, தமிழ்நாட்டில் அமைக்க வேண்டும் என விரும்பினார். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினர் சிங்கப்பூர் நூலகத்தைப் பார்வையிட்டு அறிக்கை அளித்தனர்.

அதனடிப்படையில் 2008-ஆம் ஆண்டு, அண்ணா நூற்றாண்டினையொட்டி ஆகஸ்ட் 16-ஆம் தேதி அடிக்கல் நாட்டி, 2010-ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று அண்ணா அவர்களின் 102-வது பிறந்த நாளில் நூலகத்தைத் திறந்து வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். உருவாக்கப்பட்ட நூலகத்துக்கு அண்ணாவின் பெயரையே சூட்டினார் அவரது தம்பியான கலைஞர்.

### தெற்காசிய அளவில்

8 ஏக்கர் பரப்பளவில், ரூ.172 கோடி செலவில், 3.75 லட்சம் சதுர அடிகள் பரப்பளவில், 9 தளங்களுடன், ஒரே நேரத்தில் 5,000 பேர் படிக்கும் வசதியுடன் உருவானது, அண்ணா நூற்றாண்டு நூலகம். ‘தெற்காசியாவின் இரண்டாவது பெரிய நூலகம்’ என்ற பெருமையும் பெற்றது.

12 லட்சம் புத்தகங்களை வைக்கும் வசதி, யுனெஸ்கோவின் உலக இணைய நூலகத்துடன் இணைக்கப்பட்ட டிஜிட்டல் வசதி, பார்வையற்றவர்களுக்காக 500-க்கும் மேற்பட்ட பிரெய்லி புத்தகங்கள், போட்டித் தேர்வுக்குப் படிப்பவர்களுக்குத் தனி அரங்கம், குழந்தைகளுக்குத் தனிப்பிரிவு, உட்கார்ந்த இடத்தில் இருந்தே கணினி மூலம் புத்தகத்தைத் தேடும் மென்பொருட்கள் என பார்த்துப் பார்த்து உருவாக்கினார் கலைஞர். நூலகம் கட்டப்பட்டு வந்த காலத்தில் அடிக்கடி பார்வையிட்டு, தனது கனவினை நனவாக்கினார். நூலகம் திறக்கப்பட்டபோது, அமெரிக்காவில் உள்ள ‘லைப்ரரி ஆஃப் காங்கிரஸ்’ தரத்துக்கு ஈடாக இருந்தது, அண்ணா நூற்றாண்டு நூலகம்.

தரைத்தளத்தில் 150 பேர் அமரும் விசால மான அரங்கம், 136 பேர் அமரும் வகையிலான நூல் வெளியீட்டரங்கம், நூலகத்தை ஒட்டி வெளிப்புறத்தில் 1,300 பேர் அமரும் பேரரங்கம் இவை தவிர, ‘திறந்தவெளி அரங்கம்’ ஒன்றும் உண்டு. அதில் 850 பேர் வரை அமரலாம்.

இந்த அனைத்து வசதிகளும் அறிவுசார் பயன்பாடுகளுக்காகத் திராவிட இனத்தின் காவலர் கலைஞர் அவைகளால் உருவாக்கப் பட்டவை.

### கலைஞர் மீதான காழ்ப்பு

இந்த வசதிகள், வாய்ப்புகள் ஏன் எளியோருக்குக் கிடைக்க வேண்டும் என அப்போதே நினைத்தவர் அம்மையார் ஜெயலலிதா.

ஓவியம் : ரவி பேலட்



அதுவும் முத்தமிழறிஞர் உருவாக்கிய அறிவுக் கருவூலமும் அதன் மூலம் கலைஞருக்குக் கிடைத்த புகழும் அவரைத் தூங்க விடவில்லை. 2011-ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அம்மையார் ஆட்சிக்கு வந்ததும், அண்ணா பெயரில் அமைந்த இந்த நூலகம் ‘உயர் சிறப்புக் குழந்தைகள் நல மருத்துவமனையாக மாற்றப்படும்’ என்று அறிவித்தார். ஒரே காரணம் அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடம் கலைஞர் கட்டியது என்பதுதான்.

நூலகத்தை எழும்பூரில் உள்ள டி.பி.ஐ. வளாகத்திற்கு மாற்றப்போவதாகவும், தற்போதுள்ள கட்டடத்தில் குழந்தைகள் மருத்துவமனை தொடங்கப் போவதாகவும் அவர் அறிவித்தபோது கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

ஓய்வுபெற்ற பேராசிரியர் மனோன்மணி என்பவர், நூலகத்தை மருத்துவமனையாக மாற்றுவதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடந்தார். அந்த வழக்கில் தன்னையும் இணைத்துக் கொண்டது கழகம். அதே காலகட்டத்தில் நூலகத்தின் அரங்குகளைத் திருமண நிகழ்வுகளுக்குப் பயன்படுத்த அனுமதித்தது ஜெயலலிதா அரசு. நூலகத்துக்குச் சென்ற வாசகர்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். மக்களின் கண்முன்னே, மாபெரும் அறிவு கட்டுமானம் சிதைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வழக்கு விசாரணையில் கழகத்தின் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆஜராகி வாதாடினார். இறுதியில், அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை கோட்டூர்புரத்திலிருந்து இடமாற்றம் செய்யக் கூடாது’ என்று உயர் நீதிமன்றம் குட்டு வைத்தது. நூலகத்துக்காக டி.பி.ஐ. வளாகத்தில் கட்டடமும் கட்டக்கூடாது என்றும் உத்தரவிட்டது.

நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் நூலகப் பராமரிப்புப் பணிகளை அரசு மேற்கொள்ள வில்லை. திரும்பவும் நீதிமன்றத்துக்குச் சென்றது கழகம். அதையடுத்து, அந்த வழக்கை நேரடிக் கண்காணிப்பில் எடுத்துக்கொண்ட நீதிமன்றம் ஆஷா, சுந்தரம் ஆகியோரைக் கொண்டு வழக்கறிஞர்

### வழக்கறிஞர் ஆணையம்

ஆணையம் அமைத்து, நூலகத்தின் நிலைகுறித்து அறிக்கை தாக்கல் செய்யச் சொன்னது. 29-10-2015 அன்று தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு உத்தரவிட்டதைத் தொடர்ந்து, நீதிமன்ற உத்தரவுகள் முழுமையாக அமல்படுத்தப்பட்டு நூலகம் பராமரிக்கப்படுகிறதா என நீதிமன்ற ஆணையாளர்கள் 29-11-2015 மற்றும் 02-01-2016 ஆகிய நாட்களில் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

‘நூலகத்துக்கு வாங்கப்பட்ட கணினிகள் செயலிழந்து கிடக்கின்றன. கருத்தரங்கக் கூடம், புத்தக வெளியீடு மற்றும் திறந்தவெளி அரங்கங்கள், ஆய்வாளர்களின் ஆய்வு விடுதி போன்றவை செயல்படுத்தமுடியாத நிலையில் உள்ளன. ஆய்வாளர்களுக்காகக் கட்டப்பட்ட விடுதிகள் அனைத்தும் இரவு 9 மணிக்கு மேல் சமூக விரோதிகளுக்குப் பயன்படுகின்றன.

நூலகம் தொடங்கப்பட்டபோது இருந்த உறுப்பினர்களைத் தவிர, அதன் பிறகு யாரையும் உறுப்பினராகச் சேர்க்கவில்லை. நூலகம் ஆரம்பிக்கப்பட்டபோது வாங்கிய 5.5 லட்சம் புத்தகங்கள்தான், அதன்பின்னர் நான்கு ஆண்டுகளாக ஒரு புத்தகம்கூட வாங்கவில்லை. புத்தகத் திருட்டைத் தடுப்பதற்கான சென்சார்கள் செயலிழந்துவிட்டதால், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் திருடுபோய்விட்டன” என அந்த அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையில், 08-01-2016 அன்றும் மூத்த வழக்கறிஞர் வில்சன் ஆஜராகி வாதாடினார். “இப்படி ஒரு அருமையான, நவீன வசதி கொண்ட, நேர்த்தியான முறையில் உருவாக்கப்பட்ட சிறந்த நூலகத்தை இடமாற்றம் செய்வது ஏன்? அரசின் இந்த முடிவு உள்நோக்கம் கொண்டது’ என்றனர் நீதிபதிகள். இரண்டு மாதங்களுக்குள் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றால், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆஜராக வேண்டியிருக்கும் என நீதிமன்றம் எச்சரிக்கை செய்தது. ஆனாலும், அ.தி.மு.க. ஆட்சி செய்த அந்த பத்தாண்டு காலமும் அண்ணா நூற்றாண்டு நூலகம் முழுமையாக செயலிழந்து கிடந்தது.

2021-ஆம் ஆண்டு, திராவிட மாடல் நாயகர் ஆட்சி அமைந்ததும் நூலகத்தைப் புனரமைக்கவும், பழுதுகளைச் சரி செய்யவும் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு உத்தவிட்டார். மீண்டும், புதுப்பொலிவு பெற்றது அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம். அங்குலம் அங்குலமாகத் திட்டமிட்டு கலைஞர் உருவாக்கிய இந்த நூலகம் இன்று பலரது வாழ்க்கைக் கனவுகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

கடந்த சில ஆண்டுகளில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகளாகவும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களை அரசு ஊழியர்களாகவும் ஆக்கியிருக்கிறது. ஒரு நல்லரசு என்ன செய்யும் என்பதற்குச் சான்றாக அண்ணா நூற்றாண்டு நூலகம் இன்றும் உயர்ந்து நிற்கிறது.

> **“அங்குலம் அங்குலமாகத் திட்டமிட்டு கலைஞர் உருவாக்கிய இந்த நூலகம் இன்று பலரது வாழ்க்கைக் கனவுகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.”**

...தொடரும்

## ஜெகநாதனுக்கு எதற்குப் பாராட்டு விழா?

சேலம், பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த ஜெகநாதன் பணிக்காலத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு ஆளானவர். அருந்ததியினருக்குக் கிடைக்க வேண்டிய தமிழ்த் துறைப் பேராசிரியர், மேலாண்மைத் துறை, நூலக அறிவியல், தமிழ்த்துறை இணைப் பேராசிரியர்கள் பதவிகளைப் பொதுப்போட்டிக்கு விட்டதாக, இவர் மீது புகார் உள்ளது. மேலும், விதிகளை மீறி, அரசு நிதியைப் பயன்படுத்தியது தொடர்பாகவும், புகார் அளித்தவர்களை, சாதியைச் சொல்லித் திட்டியதாகவும் இவர் மீது வழக்குகள் உள்ளன. இந்த வழக்குகளில் ஜாமினில் வெளியே இருப்பவர் ஜெகநாதன்.

இவர் மீது நடவடிக்கை எடுக்க, தமிழ்நாடு அரசு கோரிய அனுமதிக்கு ஒப்புதல் தராமல் பாதுகாத்து வந்தவர், ஆளுநர் ஆர்.என்.ரவி. ஆனால், தற்போது ஜெகநாதன் பணி ஓய்வில் சென்றதை ஒட்டி, ஆளுநர் மாளிகையில் விருந்து வைத்து, பிரிவு உபசார விழாவை நடத்தியிருக்கிறார் ஆர்.என்.ரவி. 2024-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கோவையில், ஒரு கல்லூரி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய ஆர்.என்.ரவி, “இன்று ஊழல் ஒரு பெரும் பிரச்னையாக உள்ளது” என்று பேசியிருந்தார். ஆனால், இப்போது அவரே ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவருக்குப், பிரிவு உபசார விழா நடத்தியிருக்கிறார்.

ஓய்வுபெற 22 நாட்களே இருந்த நிலையில், தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருவள்ளுவனை, அவர் மீதான ஊழல் புகார்களைக் காரணமாகக் கூறி, பணியிடை நீக்கம் செய்தார். ஆனால், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த இராம.கதிரேசனுக்கு எதிராகவும் பல்வேறு ஊழல் புகார்கள் இருந்தாலும், அவர் பணியிடை நீக்கம் செய்யப்படவில்லை. 2024-ஆம் ஆண்டு டிசம்பரில் அவர் பணி ஓய்வு பெற்றபோது, அழைத்து தேநீர் விருந்தளித்தார் இந்த ஆர்.என்.ரவி. ஒருதலைபட்சமாகவும், நியாயத்திற்கு அப்பாற்பட்டும் செயல்படுவதுதான், ஆர்.என்.ரவியின் வழக்கமோ என்று விமர்சனங்கள் எழுகின்றன.

## ஃப்ளாஷ்பேக்



கே.எஸ்.ஜெயராமன்



### தலைவர் அளித்த பட்டம்!

26.05.1986 அன்று சென்னை, அன்பகத்தில் தலைவர் கலைஞரைச் சந்தித்து, திருமண வாழ்த்துப் பெற்றேன். அதே மாதம் 19-ஆம் தேதி எனக்கும் இலங்கைத் தமிழர் வெள்ளையன் அவர்களின் இளைய மகள் சித்ரா அவர்களுக்கும் இணையேற்பு நடைபெற்றதை அவரிடம் சொன்னேன். அப்போது, தலைவர் கலைஞர் எனக்கு ‘இடைக்கழிநாடு’ ஜெயராமன் என பட்டம் கொடுத்து, அவரே வாழ்த்தியது மட்டுமின்றி, இலங்கையில் இருந்து அவர்கள் வந்த விவரம், பெற்றோர், கல்வி போன்றவற்றைக் கேட்டு, இலங்கைத் தமிழருக்கு எனது கட்சியில் ஒருவர் வாழ்வளித்தது பெருமைக்குரியது எனவும் பாராட்டி வாழ்த்தினார். அப்போது அறிவாலய கட்டட நிதியும் வழங்கினேன். இன்று 39 ஆண்டுகள் நிறைவு பெற்றபோதும், தினம் தினம் தலைவரின் வாழ்த்தைப் பெற்றது போன்ற உணர்வுகளே அதிகம்.

**– கே.எஸ்.ஜெயராமன், சித்தாமூர் ஒன்றிய கழகப் பிரதிநிதி, கடப்பாக்கம், செய்யூர் (தா), செங்கல்பட்டு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஒரே நேரத்தில் 2 மாநாடுகள்!

செங்கல்பட்டு மாவட்ட தி.மு.க. 4-வது மாநாடும், நெல்லை மாவட்ட தி.மு.க. 4-வது மாநாடும் ஒரே நேரத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்றன. 15-10-66, 16-10-66 தேதிகளில் செங்கல்பட்டு அரங்கநாதன் பந்தலில், டபிள்யூ.கே.தேவராசன் அரங்கில் நடைபெற்றது. நெல்லை மாவட்ட மாநாடு தூத்துக்குடி கே.வி.கே. சாமி பந்தலில், தாளமுத்து அரங்கில் அதே நாட்களில் நடைபெற்றது. இப்படிப்பட்ட நிகழ்வு வேறு எந்தக் கட்சி வரலாற்றிலும் அதுவரை நடைபெற்றதில்லை.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131